செ.வெ.எண்:38 நாள்:18.04.2017

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 12(1)(C) இன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்புகளில் குறைந்த பட்சம் 25% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

2017–2018 ஆம் கல்வியாண்டில் இச்சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வண்ணமும், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டும் 20/04/2017 முதல் 18/05/2017 வரை உள்ள காலத்தில் கீழ்காணும் மையங்களில் இணையதள வழியாக அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கீழ்கண்ட மையங்களில் பெறப்படவுள்ளன.

- முதன்மைக் கல்வி அலுவலகம், கரூர்.
- மாவட்டக் கல்வி அலுவலகம், கரூர்.
- மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், கரூர்.
- அனைவருக்கும் கல்வி இயக்க அலுவலகம், கரூர்.
- கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து இ–சேவை மையங்கள்.
- கரூர், தாந்தோணி, அரவக்குறிச்சி, க.பரமத்தி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகைமலை ஆகிய ஒன்றியங்களில் அமைந்துள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்கள்.
- தரகம்பட்டி ஒன்றியத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கருணை இராகவாஜி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி.

இத்திட்டத்தில் கீழ் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் பள்ளி அமைந்துள்ள இடத்திற்கும், மாணாக்கரின் இருப்பிடத்திற்கும் இடையேயான தொலைவு ஒரு கி.மீ. சுற்றளவாக இருத்தல் வேண்டும்.

சேர்க்கை வேண்டும் மாணாக்கர் கீழ்கண்ட ஆவணங்களின் அசலை மேற்காண் மையங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

- கடவுச் சீட்டு அளவுள்ள நிழற்படம், பிறப்புச் சான்றிதழ் (அசல்),
- ஜாதிச் சான்றிதழ் (அசல்),
- நலிவடைந்த பிரிவினரில் இதர வகுப்பினரின் ஆண்டு வருமானம் ரூ 2,00,000/–க்குள் இருப்பின் அவர்களின் வருமானச் சான்று (அசல்),
- பள்ளிக்கும், மாணவர் வசிக்கும் இருப்பிடத்திற்கும் இடையேயான தொலைவு 1 கி.மீ. மற்றும் 1.5 கி.மீ. சுற்றளவிற்குள் இருப்பதற்கான ஆதாரத்திற்கான சான்று (அசல்)

(வருவாய்த் துறையினரால் அளிக்கப்பட்டுள்ள இருப்பிடச் சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இவற்றுள் ஏதேனும் ஒன்றின் அசல்)

ஆகியவற்றுடன் மேற்காண் மையங்களை அணுகி விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக தரவேற்றம் செய்து, ஒப்புகை சீட்டினை பெற்றுக் கொள்ளலாம் என்று கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி தி.அருள்மொழி தேவி தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**